அடையாள இலக்கம்:

D

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2018

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்

Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# அதிமேற் பிரிவு

(12 – 14 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணித்தியாலங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**(அ) கீழே தரப்பட்ட சொற்களைப் பிரித்து எழுதுக** (5 புள்ளிகள்)

1. செலவாயிற்று ____________ + ____________
2. தேங்காய் ____________ + ____________
3. வேற்றினத்தவர் ____________ + ____________
4. குறளோவியம் ____________ + ____________
5. வடகிழக்கு ____________ + ____________

**(ஆ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு எதிர்ப்பொருள் கொண்ட சொற்களை எழுதுக.** (5 புள்ளிகள்)

1. அகம் = ____________________
2. இளமை = ____________________
3. உண்மை = ____________________
4. குழப்பம் = ____________________
5. வென்றான் = ____________________

**(இ) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களிற் கோடிடப்பட்டுள்ள இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதி வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.**

(10 புள்ளிகள்)

1) ஔவையார் " இளமையிற் ______________________ " என்றார்.

2) அக்காலத்தில் மனிதர்கள் இறைச்சியை நெருப்பில் ______________________ உண்டனர்.

3) மாணவர்கள் பள்ளிக்கு வரும்போது தூய்மையான சீருடை ______________________ வரவேண்டும்.

4) மாணவர்கள் தீய பழக்கவழக்கங்களுக்கு ______________________ தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும்.

5) இளமையில் கற்கும் கல்வி ______________________ ஆணி போன்று மனதிற் பதிந்து நிற்கும்.

6) பிள்ளைகள் இளமையிலேயே பணம் சேமிக்கும் ______________________ மேற்கொள்ள வேண்டும்.

7) உடல் நன்றாக இயங்குவதற்குச் சத்துள்ள ______________________ தேவை.

8) ஆசிரியர் கேள்வி கேட்டதும் மாணவன் ______________________ கூறினான்.

9) ஒருவர் உடுக்கும் ஆடை பழையதாக இருந்தாலும் ______________________ இருப்பது முக்கியம்.

10) நன்றி ______________________ நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று.

**(ஈ) கீழே கோடிடப்பட்ட சொற்களுக்கு மிகப் பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொற்களின் கீழே கோடிடுக.** (10 புள்ளிகள்)

1. தேவகி எழுதிய கட்டுரையில் பிழைகள் **<u>மலிந்து</u>** காணப்பட்டன.

   அ. குறைவாகக் ஆ. தெளிவாகக் இ. ஏராளமாகக் ஈ. மறைவாகக்

2. அபிராமிக்கு நடனக்கலையில் **<u>நாட்டம்</u>** ஏற்படுவதற்கு அவளுடைய தாயார் முக்கிய காரணமாக இருந்தார்.

   அ. கவனம் ஆ. அனுபவம் இ. விருப்பம் ஈ. ஊக்கம்

3. இரசிகர்கள் இசை வல்லுனரின் இன்னிசையில் **<u>மெய்மறந்து</u>** இருந்தனர்.

   அ. ஈடுபட்டு ஆ. தன்னை மறந்து இ. ஆர்வம் கொண்டு ஈ. மனமுருகி

4. தமிழ் மொழியின் **<u>தொன்மை</u>** பற்றி அறிய விரும்புகிறவர்கள் தமிழ் இலக்கியங்களைப் படிக்க வேண்டும்.

   அ. இனிமை ஆ. பழைமை இ. பெருமை ஈ. மேன்மை

5. சில வழக்குகளுக்குத் தக்க **<u>தடயங்கள்</u>** கிடைக்காததால் விசாரணைகள் பாதியிலேயே கைவிடப்படுகின்றன.

   அ. செய்திகள் ஆ. குறிப்புகள் இ. ஆதாரங்கள் ஈ. சாட்சிகள்

6. பெரும் ஆழமான **<u>சமுத்திரத்தில்</u>** மூழ்கி முத்தெடுப்பதில் பாண்டிநாட்டிற் சிலர் வல்லவர்கள்.

   அ. ஆழியில் ஆ. ஆற்றில் இ. தடாகத்தில் ஈ. கிணற்றில்

7. பிறருக்கு **<u>உரிய</u>** பொருள்களின் மீது ஆசைப்படக் கூடாது.

   அ. சொந்தமான ஆ. இஷ்டமான இ. தேவையான ஈ. விருப்பமான

8. நாம் ஈடுபட்ட செயலில் வெற்றியைச் சாதிக்கும் வரை எத்தகைய **<u>இடர்பாடுகள்</u>** வரினும் மனம் தளர்தல் கூடாது.

   அ. இழப்புகள் ஆ. நோய்கள் இ. துன்பங்கள் ஈ. தோல்விகள்

9. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு நாட்டு நலனில் **<u>அக்கறை</u>** காட்டும் மக்களே பெரிதும் காரணமாக இருக்கின்றனர்.

   அ. அன்பு ஆ. பாசம் இ. ஆர்வம் ஈ. உணர்ச்சி

10. நல்ல நூல்களைப் படிப்பவர்களின் **<u>சிந்தனையில்</u>** நல்லெண்ணங்களே அரும்பும்.

   அ. எண்ணத்தில் ஆ. நோக்கத்தில் இ. கனவில் ஈ. பார்வையில்

**(உ) கீழே தரப்பட்ட ஒவ்வொரு சொல்லையும் பாவித்து அதன் பொருள் விளங்கக் கூடியதாகச் சரியான வசனம் அமைக்கவும்.** (20 புள்ளிகள்)

அ. **இலை :** ……………………………………………………………………………

……………………………………………………………………………

**இழை** : ……………………………………………………………………………

……………………………………………………………………………

ஆ. **கரை :** ……………………………………………………………………………

……………………………………………………………………………

**கறை :** ……………………………………………………………………………

……………………………………………………………………………

இ. **ஒலி :**……………………………………………………………………………

……………………………………………………………………………

**ஒளி** :……………………………………………………………………………

……………………………………………………………………………

ஈ. **மனம் :**……………………………………………………………………………

……………………………………………………………………………

**மணம் :**……………………………………………………………………………

……………………………………………………………………………

உ. **வால்** :……………………………………………………………………………

……………………………………………………………………………

**வாள்** :……………………………………………………………………………

……………………………………………………………………………

**(ஊ) பின்வரும் பத்திரிகைச் செய்தியைக் கருத்தூன்றிப் படித்து, அதன்பின்னர் கீழ்காணும் வினாக்களுக்கு உங்கள் சொந்த வாக்கியங்களில் விடையெழுதுக. (25 புள்ளிகள்)**

ஆவுர் என்னும் ஊர் சோழ நாட்டைச் சேர்ந்தது. அந்த ஊரிற் பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் அன்பும் பண்பும் அறிவும் புலமையும் நிரம்பப் பெற்றிருந்தார்.

ஒரு சமயம் சாத்தனார் குடும்பத்தை வறுமை பற்றிக்கொண்டது. அவருடைய மனைவியும் குழந்தைகளும் பட்டினியினால் வாடினார்கள். அவர்களது முகங்களைப் பார்த்த சாத்தனாரின் கண்களில் நீர் வழிந்தது. திடீரென்று புலவருக்கு வள்ளல் குமணணின் நினைவு வந்தது. அவர் குமணனை நாடிச் சென்று பரிசில் பெற, அவன் நாட்டை நோக்கிப் புறப்பட்டார்.

குமணனின் நாட்டை அடைந்த சாத்தனார் ஓர் அதிர்ச்சியான செய்தியை அறிந்தார். குமணனின் தம்பி இளங்குமணன் தீய நண்பர்களோடு சேர்ந்து சூழச்சியால் நாட்டைக் கவர முயற்சி செய்தான். தன் அண்ணனுக்கும் மக்களுக்கும் பல தீமைகளைச் செய்தான். அதனால், குமணன் மனமுடைந்து நாட்டைத் துறந்து காட்டிற்குச் சென்று வாழ்கிறான் என்பதனைச் சாத்தனார் அறிந்து கொண்டார்.

காட்டில் வாழும் குமணனைக் காணப் புலவரின் மனம் விரும்பியது. ஆதலால் அவர் காட்டிற்கு சென்று குமணனைச் சந்தித்தார். இருவரும் அன்போடு உரையாடினார்கள். புலவரின் வறுமையை அறிந்த குமணன் வருந்தினான். சாத்தனாரின் வறுமையை எப்படிப்போக்குவது என்று சிந்தித்த போது அவனுக்குத் திடீரென்று ஓர் எண்ணம் பளிச்சிட்டது.

குமணன் தன் வாளை எடுத்து புலவரிடம் நீட்டி, ''என் தலையைக் கொண்டு வருவோருக்கு பெரும் பரிசு அளிப்பதாக என் தம்பி அறிவித்துள்ளான். நீர் என் தலையை வெட்டிச் சென்று என் தம்பியிடம் கொடுத்தால் அவன் உமக்குப் பரிசுகள் அளிப்பான். அவற்றைப் பெற்று உமது வறுமையைப் போக்கிக்கொள்க'' என்று வேண்டினான். குமணனின் கொடையுள்ளம் பெருந்தலைச் சாத்தனாரை மெய்சிலிர்க்கச் செய்தது. குமணன் நீட்டிய வாளை புலவர் வாங்கிக்கொண்டு இளங்குமணனிடம் சென்றார்.

புலவர் இளங்குமணனைச் சந்தித்து குமணனின் உயர் பண்புகளை அவனுக்கு உணர்த்தினார். இளங்குமணன் தன் அண்ணனுக்குச் செய்த கொடுமைகளை எண்ணி மனம் வருந்தினான். குமணனை மீண்டும் அரியணையில் அமர்த்தினான். சகோதரர்களை ஒன்றினைத்த சாத்தனாரும் பரிசுகள் பல பெற்று ஊர் திரும்பினார்.

**பின்வரும் வினாக்களுக்கு உமது சொந்த நடையிலே விடை எழுதுக.**

1. சாத்தனார் எதற்காக குமணனை நாடிச் சென்றார்?

2. குமணன் காட்டில் வாழ்ந்து வரக் காரணம் என்ன?

3. குமணன் புலவரின் வறுமையை எப்படிப் போக்க எண்ணினான்?

4. இளங்குமணன் எப்படி மனம் மாறினான்?
   உங்கள் இலகு நடையிலே பதிலைத் தரவும்.

5. அரசர்கள் புலவர்களை மதித்து வந்தார்கள் என்பதற்கு உரைப்பகுதியிலிருந்து ஆதாரங்களுடன் விளக்குக.

**(எ) கீழே தரப்பட்ட குறிப்புக்களை வாசித்து அதற்கமைய 200 சொற்களுக்குக் குறையாது ஒரு கட்டுரை எழுதுக.**

(25 புள்ளிகள்)

இயற்கை என்பது இறைவனது கொடை இதை எவ்வாறு நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்பது பற்றிச் சுற்றுச்சூழல் தினத்தன்று பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு கட்டுரை ஒன்றை எழுதுக.

அல்லது

ஆங்கில மொழியின் ஆதிக்கம் மிகுந்துள்ள புலம் பெயர் நாட்டிலே தமிழ் கற்க விளையும் தமிழ்ச் சிறார்களுக்கு ஏற்படும் சவால்கள், பிரச்சனைகள் பற்றியும் அவற்றை எவ்வாறு எதிர்கொள்ளலாம்? என்பது பற்றியும் 'மாருதம்'' என்ற சஞ்சிகைக்கு ஒரு கட்டுரை எழுதுக.

விடைத்தாள் - ஊ)

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………